RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22132

பண்பாட்டு நோக்கில் பழமொழி நானூறு

ஆ. திவ்யா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பி.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி, நாமக்கல்-637207, இந்தியா

From a cultural point of view the Proverb is Four Hundred

A. Divya [a, *]

[a] Department of Tamil, PGP College of Arts and Science, Namakkal-637207, India

* Corresponding Author:
dhivyadivine223@gmail.com

Received: 19-08-2021
Revised: 09-01-2022
Accepted: 15-01-2022
Published: 30-01-2022

Check for updates

ABSTRACT
Any literature would reveal the context of the times in which it originated, and literature would portray the society of the time according to the mirror of time. The creator of art creates art as an expression of the society in which he lives, and a writer of literature, by the power of his profoundly versatile scholarship, is able to create imaginary men, through whom he is able to express the society and culture of his time. By showing so. From the literature he has created, we can understand the period of the life of the vasiyar, the cultural norms of the eco-society, etc.

Keywords: Proverb, Literature, Scholar, Society

முன்னுரை

மனிதன் தன் வாழ்க்கையில் பல்வேறு குழுக்களில் பங்கேற்றுச் செயற்படுகிறான். அவற்றுள் முதன்மையானது குடும்பம் ஆகும். மக்கள் வாழ்க்கையின் பெரும்பகுதி குடும்பத்தில் அமைகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை இதனோடுதான் அவர்கள் தொடர்ச்சியாகத் தொடர்பு கொள்கின்றனர். சமுதாயம் முற்றிலும் வளர்ச்சியடையக் குடும்பம் ஓர் அடிப்படையாக உள்ளது. குடும்பம் சமுதாயத்தின் அடித்தளமாகக் கருதப்படுகிறது. நம் நாட்டினர் பண்டைக்காலத்தில் குடும்பவாழ்வின் பெருமையினை நன்குணர்ந்திருந்தனர். தலைவன், மனைவி, மக்களோடு வாழ்ந்த குடும்ப வாழ்க்கையைப் பாடாத சங்கப் புலவர்கள் இல்லை எனலாம். 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பது பாரதிதாசனின் வாக்கு ஆகும். குழந்தைகளைப் பெற்று அவர்களை வளர்ப்பதற்காக ஏற்பட்ட திட்ட வட்டமான தொடர்புகளின் பால் உறவும் அமைந்த குழுவே குடும்பமாகும். அத்தகைய குடும்பத்திலிருந்துதான் சமுதாயத்தின் இயக்கம் ஆரம்பிக்கிறது.

இல்லறம்

கணவன் மனைவி ஆகிய இருவரும் இல்லில் வாழும் வாழ்க்கை முறைமையை இல்லறம் என்று கூறுகிறோம். இரப்பவர்க்குக் கொடுத்தலும் இன்சொல் கூறுதலும் தனக்குத் தீங்கு செய்தவர்களையும் தமது உறவினரையும் மதித்து பாதுகாத்து வாழ்தலையும் உடைய இல்லறவாழ்வே துறவற வாழ்வை விட இனிதான வாழ்வு என்று ஏலாதி கூறுகிறது. "மற்றவர்க்கு உதவி செய்தலும் விருந்தினருக்கு விருந்தளிக்கும் குணமும் போர்க்களத்திலே போர் செய்யும் ஆண்மைத் தன்மையும் சோம்பல் இல்லாமல் வாழும் வாழ்க்கையையும் இல்லறம்" என்று கூறுகிறார் முன்றுறையரையனர் (Rasamanikkam Pillai, 2014). இல்லறம் இல்லாத துறவறத்தை அறநெறிச் சான்றோர்கள் வலியுறுத்த

வில்லை. இல்லற வாழ்க்கைதான் துறவிகளுக்கும் பயன்படுகின்ற வாழ்க்கை. இல்லறக் கடமைகளை முடித்தபின் துறவறத்தை மேற்கொள்பவரைத்தான் அவர்கள் சிறப்பானதாகக் கருதினார்கள்.

'குடும்பம்' எனும் அமைப்பில் குடும்ப உறுப்பினர்களின் கடமைகள் வரையறுக்கப்பட்டன. இல்லறத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் பொறுப்புகள் உள்ளன. அதனை உணர்ந்து அவர்கள் செயலாற்ற வேண்டும். அவர்கள் இருவரின் பொறுப்புணர்வுள்ள செயற்பாடுகளே இல்லறம் இனிது நடந்தேறுவதற்குக் காரணமாய் அமைகிறது.

வீட்டினுள் வறுமை பெரிதாக இருந்தாலும் அதனை வெளிக்காட்டா வகையில் இல்லறத்தால் வாழ வேண்டும். அத்தகைய வாழ்வு உயர்ந்த வாழ்வாக அமையும். புற தம்மைப் பார்த்து, பரிதாபம் கொள்ளும் வகையில் வாழுதல் கூடாது என்பதை, "அகத்தாலழிவு பெரிதாயக் கண்ணும் புறத்தாற் பொலிவுறல் வேண்டும்" பழமொழி நானூறு கூறுகின்றது. இல்லற வாழ்வில் பெண்மைக்குத்தான் முதலிடம் உண்டு (Rasamanikkam Pillai, 2014). 'இல்லாள்' என்பது குடும்பத் தலைவியைக் குறிக்கும். ஆனால் இல்லான் என்ற சொல் குடும்பத் தலைவனைக் குறிப்பதில்லை.

மனைவியைப் பற்றிய நிலையை குறிப்பிடும் அரையர் கணவன் கூற வரும் முன்னமே அவன் முகக் குறிப்பை கண்டு தேவைகளை அறிய வேண்டும். தன் மனைவி விருந்தினர்களை ஒம்ப வேண்டும். இப்படி செய்து வாழ்ந்தாள் அவர்களைவிட்டு இன்பம் எப்போதும் நீங்காது என்கிறார்.

"சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்

இல்லாளே வந்த விருந்தோம்பிச்- செல்வத் திடரின்றி

ஏமாந் திருந்தாரே நாளும் கடலுள் துலாம் பண்ணினார்,"

நல்ல மனைவாழ்க்கை வேண்டுமென விரும்புவோர், வேளாண்மை, விருந்தோம்பல், வாளாண்மை, தாளாண்மை ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும். தம்மோடு தொடர்பில்லாதவர்கட்கு வேண்டிய உதவிகளைச் செய்து தம்மோடு தொடர்புடையவராய் வந்த விருந்தினரையும், அன்றன்று புதிதாய் வரும் விருந்தினரையும் உண்டி, உடை முதலியன தந்து உபசரிக்க வேண்டும்.

குலம்

பல உறுப்பினர்களைக் கொண்ட பலகுடும்ப அமைப்புக் குலமாகக் கருதப்படுகிறது. இத்தகைய குலங்கள் தங்களுக்குள் ஒரு தொழிலை குல ஒழுக்கத்தை, மரபைப் பெற்று பேணி வளர்த்தனர். பிறகு மரபோடு கலந்துவிடாமல் பாதுகாத்தனர். பழங்காலந்தொட்டு சாதி உயர்வு தாழ்வு சமூகத்தில் இருந்து வந்ததென்பதைப் பழமொழிகள் காட்டுகின்றன. மக்கள் அவரவர் சாதிக்கேற்ற படி உயர்ந்த தாழ்ந்த குணங்களையே பெற்றிருப்பார் என்பதைப் பழமொழி நானூறு சுட்டிக் காட்டுகிறது.

"யாரும் குலக்குல வண்ணத்த ராகுப"

"மறைப்பினும் ஆகாதே தஞ்சாதி மிக்குவிடும்"

"கொற்சேரித் துன்னூசி விற்பவா இல்"

"குலத்துச் சிறியார்"

"இடையன் எறிந்த மரம்"

"நாவிதன் வாள் சேப்பிலைக்குக் கூர்த்துவிடல்"

அந்தணகுலம் அன்று முதல் இன்று வரை உயர்குலமாக மதிக்கப்பட்டது, இதை.

"அந்தணரில் மிக்க பிறப்பில்"

என்பதன் மூலம் அறிய முடிகிறது. சாதி அடிப்படையில் சமூகத்தில் நிலவி வந்த கருத்துக்களை விளக்கும் (Rasamanikkam Pillai, 2014).

'இனத்தை இனங்காக்கும் எச்சிலையை நாய்காக்கும்'

என்ற பழமொழிகள் வாயிலாக அறியலாம். அரசர் அந்தணர், வணிகர் வேளாளர் என்ற அடிப்படையான நால்வகைப் பிரிவு வழக்கத்தில் இருந்தது. இந்த நால்வகைப் பிரிவுகளும் அல்லாமல் தொழில் அடிப்படையில் அமைந்த சாதிப்பிரிவுகளும் காணப்பட்டன. ஆயர் வேட்டுவர், நுளையர், இடையர் குறவர் மருத்துவன், வண்ணான், கொல்லன், சேவகன், தச்சன், நாயகன் போன்ற சாதிப்பிரிவுகள் இருந்ததாகத் தெரிகின்றது.

கல்வி

மனிதருக்குள் இருக்கும் சிந்தனை ஆற்றலை வெளிக்கொணர முன்னோரால் கண்டறியப்பெற்றது. இக்கல்வி மக்களின் அறிவு வளர்ச்சிக்கு உதவுகிறது. கல்வி என்பதற்குப் பொதுவாகக் கற்றல் என்பதுடன் இணைத்துப் பொருள் கூறப்படுகிறது. "பிறப்பு முதல் மனிதனிடம் இயற்கையாக அமைந்து காணப்படாமல் பின்னர் பெறும் அனுபவங்களும் அவற்றின் விளைவுகளும் கற்றல் என்பதனுள் அடங்குவனவாகும்."

கல்வி தனிமனிதனுக்கு உறுதியான ஆரோக்கியமான உடலையும் அவனுடைய மனிதப்பண்பையும், வளர்ப்பதற்கு உதவும் வகையிலும் அமைதல் வேண்டும். குழந்தையின் ஆளுமைவளர்ச்சியே கற்றலின் தலையாய நோக்கம் என்று எஸ். லெட்சுமி கூறுகிறார். குழந்தைகள் தக்க சூழ்நிலையில் நல்ல முறையில் உடல் உரமும் மனவளமும் பெற்றுச் சிறந்த குடிமக்களாகத் திகழ வேண்டும் என்பதே கல்வியின் நோக்கமாகும்.

கல்வி கற்கும் முறை

கல்வி கற்க ஆயத்தமாகும் ஒருவன் மனம், மொழி, மெய் அனைத்தையும் மேற்கொண்ட சிந்தனை தொழிலாகிய கல்வியின் வழியில் விடுவது சிறப்புக்குறி யதாகக் கருதப்படுகிறது.

"தாயின் மடியில் குழந்தை கற்றுக் கொள்ளாததே இல்லை"

என்று கூறுகின்றனா; சீன நாட்டார் குழந்தைக்கு முதற் புத்தகமாக இருப்பது தாய் தந்தை நடத்தும் குடும்ப வாழ்க்கை ஆகும். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதை உணர்ந்து 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்பதை தெரிந்துக் கொண்டு கல்வி கற்க வேண்டும். கல்வி என்பது முடிவற்ற ஒரு செயலாகும். இதைத் தான் "கல்வி கரையில கற்பவர் நாள் சில என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சோம்பலின்றி மேன்மேலும் முயன்று கற்க வேண்டும். அஃதாவது, அறிவிற் சிறந்தவர்களுடன் பேசும் போதெல்லாம் தங்கள் உரையாடலில் தடுமாற்றம் ஏற்படுமாயின், அதை எண்ணிச் சோர்வடையக்கூடாது. மனத்தளர்ச்சி கொள்ளாமல் ஒவ்வொரு முறையும் புதிதாகக் கற்க வேண்டும். அவ்வாறு கற்கும் போது, தான் இதுவரை கற்கமால் போனதற்கு மனம் வருந்திப் புதியனவற்றைக் கற்பதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அது பற்றிய சிந்தனையாகவே இருந்து, முயன்று புதியனவற்றைக் கற்றுத் தெளிய வேண்டும்.

கல்லாமையால் ஏற்படும் இழிவு

கற்றவரும் கல்லாதவரும் ஒரிடத்திற்குச் செல்லின் கற்றவருக்குச் கிடைக்கும் சிறப்பும் மதிப்பும் கல்லாதவருக்குக் கிடைக்காது. அறிவில் சிறந்தவர்களைச் சமுதாயம் மதிப்பதோடு மட்டுமின்றி அவர்களுக்குத் தேவையான பொருள்களை,

'பொருள்கொடுத்துக் கொள்ளரிருள்'

என்னும் பாடலடி விளக்குகின்றது (Rasamanikkam Pillai, 2014). பழமொழி நானூற்றில் கல்வியின் மதிப்பும், கல்வியின் சிறப்பியல்புகளும், வலியுறுத்துவதோடு கல்வி சமயத்தின் அடிப்படையில் திகழ்ந்திருக்கின்றது என்பதும் பெறமுடிகிறது. கல்வி கற்றவர்களுக்குரிய விதிமுறைகள்

வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதும் கல்வி கற்றவர்களுக்குச் சமூகத்தில் மதிப்பு நிலவியிருந்ததற்கான சான்றும் கணக்கிடுகின்றன. கல்லாதவர்களுக்கு மதிப்பின்மை மரபாக வழங்கப்பட்டது.

பொருளாதாரம்

பொருளாதாரமானது மனித சமுதாயத்தின் அடிப்படை அழகாகத் திகழ்கிறது. இப்பொருளாதாரம் உற்பத்தியின் அடியொற்றியே அமைகின்றது. மனிதன் தமக்குறிய உழைப்பைப் பயன்படுத்தி இயற்கையிலிருந்து பெருகின்றவற்றை பொருளாதாரமாக ஆரம்பகாலச் சமுதாயம் கொண்டிருக்கிறது. மனித சமுதாயம் வரலாற்றுப் போக்கில் பல்வேறு கட்டங்களைத் தாண்டி வளர்ந்துள்ளது. பாரதநாட்டில் வடக்கே வேதம், உபநிடதங்கள், மனு தருமம், சாணக்கியான் அர்த்தசாஸ்திரம் போன்றவனவற்றில் சில குறிப்புகள் பொருளியல் பற்றிக்கிடைக்கின்றன. மேலும் தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள் போன்ற இலக்கியங்கள் மூலமும் அறிய முடிகிறது. அரசியல் விடுதலைப்பெற்ற பின்னர், இந்திய நாட்டு மக்கள் அனைவரும் கடைசி மனிதன் வரை பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காணவேண்டும். இதுவே நான் காணவிரும்பும் சுதந்திரம் என்று பொருளியலுக்குப் புதுவிளக்கம் கண்டார் காந்தியடிகள். இப்புவியில் ஒரு பொருட்டாக மதிக்கத்தகாதவரையும் மதிக்குமாறு, போற்றுமாறு செய்வது பொருட் செழிப்பு. எனவே பகைவர் செருக்கையறுக்கும் கூடியவாள் பொருட்சிறப்பினும் வேறில்லை என்பதை

'செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்

எஃகதனிற் கூரிய தில்'

என்னும் குறட்பா விளக்குகிறது (Puliyur Kesigan, 2009).

அரசியல்

அரச பதவி என்பது மிகப் பொறுப்பு வாய்ந்ததாகும். பழங்கால அரசியலில், வேந்தன் காணும் கடவுளாகக் காட்சியளிக்கிறார். 'திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' என்ற தொடர் மக்களிடம் வழங்கி வந்ததிலிருந்து அரசனை தெய்வமாக பாவித்தனர் என்பது அறியமுடிகிறது. வேந்தன் தவறு செய்பவர்களை ஒறுக்கும்போதுஇவர் செல்வர், வறியர் என்று கருதாமல் ஒறுத்தல் வேண்டும். இதனை

'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்" என்று கூறுவர் (Puliyur Kesigan, 2009).

வாணிகம்

வாணிகம் என்ற சொல் உள்நாட்டு வாணிகம், கடல் வாணிகம் என்ற இரண்டையும் குறிக்கும். பண்டைத் தமிழர் வாழ்வில் வாணிகம் சிறப்புப் பெற்றிருந்தது. தமிழ்நாட்டுக் கலைகளும், பண்பாடும் வாணிகத்தின் வாயிலாகத்தான் அயல் நாடுகளில் பரவின. பழமொழிகளைக் கொண்டு மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறியலாம் எனக் கலைக் களஞ்சியம் குறிப்பிடுகிறது. காலந் தவறாமை வாணிபத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும்.

'செட்டி புறப்பட பட்டணம் விடியும்'

தமிழகத்தில் திரைகடல் ஓடியும் திரவியம் திரட்டினர் காற்று அறிந்து கடலில் கலம் செலுத்தினர் கப்பல்காரன் பெண்டாட்டி தொப்பைக்காரி, கப்பல் கவிழ்ந்தால் பிச்சைக்காரி, 'குறையச் சொல்லி நிறைய அள' என்ற பழமொழிகள் வழக்கத்தில் உள்ளது. வாணிகத்திற்கு நாணயம்' இன்றியமையாதது.

வேளாண்மை

நமது நாட்டைப் பொறுத்தவரை வேளாண்மைத் தான் முதன்மையான தொழிலாகக் கொள்ளப்படுகிறது. தமிழர் தம் வாழ்க்கை வருவாய்க்கு வேளாண்மைத் தொழிலைத்தான் அடிப்படையாகக் கொண்டிருந்தனர் வாணிகம் இரண்டாம் நிலையில் வைத்து எண்ணப்பட்டது. எனவே வேளாண்மை பற்றிய கருத்துக்கள் நாட்டுப்புறப் பழமொழிகளிலும் இலக்கியப் பழமொழியிலும் இடம் பெற்றுள்ளது. 'ஆடிப்பட்டம் தேடி விதை, 'அறுக்க மாட்டாதவன் அடியில் ஐம்பத்திரண்டு அரிவாள்

'உழவர்கள் ஆற்றில் முன்னே உண்டாகின்ற ஈரத்தினால் பின்னே வெள்ளம் வரும் என்பதை அறிவர். தன் கருத்தை வெளித்தோன்றாமல் ஒருவர் எவ்வளவு மறைத்தாலும் முகத்தின் குறிப்பால் அகத்தின் கண் உள்ள எண்ணம் வெளிப்படும் என்பதற்கு உவமையாக இக்கருத்து எடுத்தாளப்பட்டது.

'வெள்ளம் வருங்காலை, ஈரம்பட் டஃதேபோல்'

உழவுக்குப் பயன்படும் எருதுகட்கு எவ்வளவு உணவுதானும் குற்றமில்லை. அந்த அளவுக்கு அவை நன்றாக வளர்ந்து உழவிற்குப் பெரும்பயன் தரும் (Rasamanikkam Pillai, 2014).

முடிவுரை

எந்தவொரு இலக்கியமும் அதுதோன்றிய காலச்சூழலை வெளிப்படுத்தி நிற்கும். இலக்கியம் காலக்கண்ணாடி என்பதற்கேற்ப அக்காலச் சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டும். கலைப்படைப்பாளன் தான் வாழும் சமுதாயத்தின் வெளிப்பாடாக அக்கலையைப் படைத்துக் காட்டுகின்றான். இலக்கியம் படைக்கும் ஒருவன் தன் ஆழ்ந்த பல்துறைப் புலமையின் திறங்கொண்டு கற்பனை மாந்தர்களைப் படைத்து, அவர்கள் வழியாக அவன் காலச் சமுதாயம், பண்பாடு போன்றவற்றை வெளிப்படுத்திக் காட்டஇயலும். அவ்வாறு காட்டுவதன் மூலம். அவன் படைத்த இலக்கியத்தை வைத்துக் கொண்டு அவ்வாசிரியனின் வாழ்ந்த காலம், சூழல் சமுதாயத்தின் பண்பாட்டு நெறிமுறைகள் போன்றவற்றை அறிய முடிகிறது.

References

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.
Rasamanikkam Pillai, M. (2014) Palamoli Nanuru, Kalaga Veliyedu, Chennai, India

Funding: No funding was received for conducting this study.

Conflict of Interest: The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License